நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.90/2019
அரசு தரப்புக்காக அ. சா.8 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நூர்ஜகான் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.2 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 2.31)

நான் தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டை நிர்வாகம் செய்து வருகிறேன். விருத்தாசலத்தில் கைகோளார் தெருவில் எனது வீடு உள்ளது. எனது வீட்டின் பக்கத்தில் மற்றொரு சொந்த வீடு உள்ளது. அதில் கீழ் தளத்தில் 3 வீடுகள் மற்றும் மேல் தளத்தில் 3 வீடுகள் உள்ளது. ஆஜர் எதிரியை பார்த்துள்ளேன். இந்த வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி, நந்தினி ஆகியோர்களை தெரியும். எனது வீட்டில் கீழ் தளத்தில் கடைசியாக உள்ள 3வது வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்தார்கள். ஆஜர் எதிரி அம்சவள்ளியின் கணவர். அம்சவள்ளியின் வீட்டில் அம்சவள்ளி அவரது மகள் நந்தினி அவரது மகன் மற்றும் ஆஜர் எதிரி வசித்து வந்தனர். 27.06.2018 ஆம் தேதி

காலை 6.30 மணி அளவில் எனது மகளை கல்லூரில் செல்ல அனுப்பிவைப்பதற்காக வெளியே வந்தபோது எதிரியின் வீட்டிலிருந்து சத்தம் கேட்டது. நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது ஆஜர் எதிரி வீட்டில் இருந்து வெளியே வந்தார். நான் வீட்டின் உள் சென்று பார்த்தபோது அம்சவள்ளியின் அவரது மகள் நந்தினி தீ காயத்துடன் இருந்தார். அவர்களிடம் என்ன ஆனது என்று கேட்டதற்கு எதிரி தங்களை எரித்துவிட்டதாக சொன்னார். பிறகு ஆட்டோவில் அம்சவள்ளி மற்றும் அவரது மகளையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பிறகு மருத்துவமனையில் அம்சவள்ளி மற்றும் அவரது மகள் நந்தினியும் இறந்துவிட்டதாக நான் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி என் வீட்டில் அவரும் அவருடைய குழந்தைகள் மட்டும் வாடகைக்கு இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியும் தான் உடன் இருந்தார். அம்சவள்ளி எரிந்துகொண்டிருந்தபோது அவரால் பேச இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. அம்சவள்ளி தான் என்னிடம் என்னுடைய கணவரான ஆஜர் எதிரிதான் தன்னை எரித்துவிட்டதாக சொன்னார். போலிஸ் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்று கேட்டால் 2 முறை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது எனக்கு பக்கத்தில் சொந்தமாக வீடு உள்ளது அங்குதான் தங்கியிருந்தேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரியின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒட்டிய பக்கத்து வீட்டில் நான்

குடியிருந்தேன். நான் வெளியே வந்தபோது என்ன நேரம் என்று கேட்டால் காலை 06.30 மணி இருக்கும். போலிசார் என்னை விசாரிக்கும்போது எனது மகள் கல்லூரிக்கு செல்ல அனுப்புதற்காக வெளியே வந்தேன் என்று போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அம்சவள்ளியை நான்தான் ஆட்டோவில் அனுப்பி வைத்தேனா என்றால் ஆமாம். எதிரியை நான் பார்த்ததே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதைபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 2.48)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.